

தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான தி.மு.கழக சட்டத்துறை WAR ROOM ஐ திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் தலைமையில், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் க.செல்வராஜ் வரவேற்புரையில் முன்னாள் அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ், கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எம்.தண்டபாணி முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் வழக்கறிஞர்கள் ஈரோடு அருள்செல்வம், ராதாகிருஷ்ணன், திருப்பூர் விவேகானந்தன், பத்மநாபன் உள்பட கழக வழக்கறிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### காரம்பாக்கம் க.கணபதி தலைமை! மதுரவாயல் தெற்கு பகுதி,

# ஆர்.டி.ராஜன் இல்ல மணவிழா வரவேற்பு!

## டி.ஆர்.பாலு எம்.பி. – மா. சுப்பிரமணியன் – ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

சென்னை,செப்.18-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 150வது வட்ட முன்னாள் அவைத் தலைவர் ஆர்.டி.ராஜன் பேரனும், 150 வது வட்ட துணை செயலாளர் ச.தில்லைவாணன் சகோதரரும் டி.சக்திவேல் - ச.சந்திரா ஆகியோர் மகன் ஆர்.எஸ்.ரமணன் -சி.ராஜாகண்ணு - ரா.ஜெயந்தி ஆகியோர் மகள் ரா.சிவப்பிரியா ஆகியோர் திருமண வரவேற்பு இன்று 18.09.2026 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மேல் சென்னை பரணி புத்தூர் மாங்காடு ரோட்டில் அமைந்துள்ள கிருஷ்ணவேணி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.



இவ்விழாவில் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினரும் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி தலைமை தாங்குகிறார். ஹேமலதா கணபதி எம்.சி., வட்டச் செயலாளர் சி.சுந்தர் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இதில் மணமக்களை கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

வட்டக் கழக நிர்வாகிகள் மு ஆறுமுகம் .க.கைலாசம்.இரா. ராஜேந்திரன்.லோ.அருள் .ஏ. ஜெயவேல்.ர. லதா.இரா.ரமேஷ்.இரா.சீனிவாசன். வே. ஜெகநாதன்.ஜி.சீனிவாசன். மா.பா. சித்ராலயம், ஜெ.ஏ.துரை. க.நரேன்கணபதி. அ.கவுஸ் பாஷா, அ.ராகேஷ், எஸ். நித்யானந்தம், எம்.செல்வதுரை, R.கோவிந்தசாமி. ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர்.வே.ராஜன் எம்.சி. வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளர்அயப்பாக்கம் துரை வீரமணி, எஸ்.அருணாசலம், வ.செல்வகுமார், பி.எம். செல்வராஜ், வே. மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி.எம்.சி., க.ராஜீ எம்.சி., ஆர்.கர்ணல், தீ. பாலாஜி, மு.அ.செந்தில் சுரேஷ், ஆ.மாலினி எம்.சி., ம.உதயகுமார், வட்டக் கழக செயலாளர்கள் சி.ரமேஷ் ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், ஜெ. பாஸ்கரன், தி.சார்லஸ், ஆ.செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம்.கே.பி.அண்ணாதாசன், எ.எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், எம்.இ.ஸ்டாலின், ப.ஆலன், மு.ரூபன், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி ரமேஷ், சாந்தி ராமலிங்கம், ரமணிமாதவன், மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ரா.சேகர், எஸ்.ரவி, ஏ.டி.எத்திராஜ், ஜி.ராமகிருஷ்ணன், கே. நாராயணன், ஆர்.சிவலிங்கம், ஜி.ராமலிங்கம் மற்றும் அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள். மற்றும் கழக முன்னோடிகள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### மதுராந்தகம் – தாராபுரம் இடைத்தேர்தல்

# தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு பல இயக்கங்கள் ஆதரவு!

சென்னை, செப்.18-

மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு பல்வேறு கட்சிகள், இயக்கங்கள், சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

நடைபெறவிருக்கும் 2026 மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ள கட்சிகள், இயக்கங்கள், சங்கங்கள் வருமாறு:-

★ கே.ஐ.எம்.ஹக்கீம் அவர்களை மாநில பொதுச் செயலாளராக கொண்ட தமிழ்நாடு மாநில அகில இந்திய திரிணாமூல் காங்கிரஸ் கட்சி;

★ ஜி.ஏ.சுபாஹன் அவர்களை மாநில பொதுச்செயலாளராக கொண்ட இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநிலக்குழு;

★ ப.தேவேந்திர ராவ் அவர்களை நிறுவனர் பொதுச்செயலாளராக கொண்ட "அருந்ததி கட்சி";

★ கோ.வைரபாண்டியன் அவர்களை நிறுவனர் - தலைவராக கொண்ட "அம்பேத்கர் மக்கள் முன்னணி (AMM);

★ பி.எம்.மகாலிங்கம் அவர்களை மாநிலத் தலைவராக கொண்ட சேலம் மண்டல கட்டுமானம் மற்றும் அமைப்பு சாரா உழைப்போம் உயர்வோம் பொதுநல சங்கம்

ஆகிய கட்சிகள், இயக்கங்கள், சங்கங்கள் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் முழு ஆதரவு அளிப்பதாகவும்; இத்தொகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு முழுமையாக பாடுபடுவதாக என தெரிவித்துள்ளனர்.

### மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் பங்கேற்பு!

# மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவிப்பு!



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை (19.09.2026-சனிக்கிழமை) காலை 11.00 மணிக்கு, காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் கூட்டு ரோடு, ராசி மஹாலில், நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிச் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**ஆர்.டி.சேகர்**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

### திருவொற்றியூர் மேற்கு பகுதி நிர்வாகிகள் –

# வட்ட கழக செயலாளர்கள் வார்டு மறுசீரமைப்பு குறித்து ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் தலைமையில்!

சென்னை,செப்.18-

சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் வழிகாட்டுதலில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம அருள்தாசன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் ராமகிருஷ்ண நகர் 3 வது பிரதான சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் 10-9-2026 அன்று மாலை 6:00 மணி அளவில் பகுதி கழக நிர்வாகிகள்- வட்டக் கழக செயலாளர் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

தலைமை கழக பிரதிநிதிகள் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி, மற்றும் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ, (கழக துணை அமைப்பு செயலாளர்) ஆகியோர் அளித்த தலைமை கழக வழிகாட்டுதலின்படி திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம அருள்தாசன் தலைமையில் பகுதி கழக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர்கள்,

நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

**தீர்மானம் – 1**

ஒன்னாவது வட்ட முதல் ஆறாவது வட்டம் வரை அனைத்தும் இரண்டாகப் பிரித்து தலைமை கழகத்திற்கு அனுப்புதல்.

**தீர்மானம்– 2**

நடைபெறும் சீர் கெட்ட த. வெ. க அரசிற்கு பதிலடி கொடுக்க வேண்டும்.

**தீர்மானம் – 3**

நடைபெற உள்ள மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தல் பணிகளில் அனைவரும் பங்கேற்று கழக வேட்பாளர் வெற்றி பெற பாடுபட வேண்டும்.

இந்நிகழ்வில் பகுதி கழக நிர்வாகிகள் யு. எஸ். குறளரசன் எம். வஜ்ரவேல், வட்டக் கழக செயலாளர்கள் மு. சிவக்குமார் டி.சேகர் ந. ராம்குமார், கி. கண்ணன் மாவட்ட பிரதிநிதிகள் எம். சந்திரகுமார் எஸ்.கணேஷ் எஸ். ஆர். மலைராஜ் மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.மோகனசுந்தரம் மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவகுமார் மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வை. ம. கண்ணதாசன், எஸ். ராஜேஷ் மு. பாபு, ஆர். நரேன் குமார், முரசொலி குமரேசன், ஜெ.விக்னேஷ், எஸ்.கௌதம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நீலகிரி காந்தல்ராஜ்**
**செப்டம்பர் 18 (1981)**



நீலகிரி மாவட்ட தி.மு.க. செயலாளராகப் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலையை எதிர்த்து மிசா கைதியாக இருந்தவர்.

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து நடைபெற்ற மறியலில் பங்கேற்று சிறையிலிருந்தபோது மரணமடைந்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

